RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

DOI: 10.54392/ijot2231

# ஒப்பியல் நோக்கில் திருக்குறளும் திருவருட்பயனும் காட்டும் மெய்ப்பொருள்

வ. குணபாலசிங்கம் [அ,*], எம்.எஸ்.ஜெ. மும்தாஜ் சமீம் [ஆ], ர. சுரேஷ் [இ]

[அ] இந்து நாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, இலங்கை

[ஆ] பிரதிப் பதிவாளர், கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, இலங்கை

[இ] தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு-638009, தமிழ்நாடு, இந்தியா.

## A comparative perspective of fact in Thirukkural and Thiruvarutpayan

V. Gunapalasingam [a,*], M.S.J. Mumthaj Sameem [b], R. Suresh [c]

[a] Department of Hindu civilization, Eastern University, Vantharumoolai, Sri Lanaka.
[b] Deputy Registrar, General Service Division, Eastern University, Vantharumoolai, Sri Lanka
[c] Department of Tamil, Erode Arts and Science College, Erode-638009, Tamil Nadu, India
*Corresponding author Email: gunapalasingamv@esn.ac.lk
DOI: https://doi.org/10.54392/ijot2231
Received: 18-03-2022; Revised: 31-05-2022; Accepted: 02-06-2022; Published: 09-06-2022

**Abstract:** In Tamil Nadu, literature is one of the prime sources of information on religion, culture, history, philosophy, social customs, beliefs, etc. Literature that originated in the history of Tamil Nadu from time to time identifies the unique features of those times. In the development of Tamil literature, the period in which moral literature originated is called the Moral Era distinctively, which is the same time where many philosophical works of literature refer to the period of origin as the period of philosophical ethics. This study reveals the uniqueness and the generalities of God as claimed in Thirukkural and the God as portrayed in the literature of Thiruvarutpayan that originated in the philosophical period. In particular, this article gives a comparative basis for the ideas that come to mind in the 36th chapter on the power of realization in Thirukkural, and on the three elements that can be found in Thiruvarutpayana, viz., God, Life, and affection.

**Keywords:** Meiporuliyal, Siddhantham, Veedu, Pathi, Pasu, Pasam

## முன்னுரை

கருநாடக தேசத்திலிருந்து தமிழகத்திற் புகுந்த தமிழர் அல்லாதோரே களப்பிரர். தமிழ் நாட்டு வரலாற்றில் கி.பி.250 தொடக்கம் கி.பி.550 வரையான காலப்பகுதியே இவர்களின் ஆட்சிக் காலமாக வரையறுக்கப்பட்டுள்ளது. களப்பிரர்கள் சமண, பௌத்த நடைமுறைகளையே பெரிதும் கைக்கொண்டிருந்ததுடன் அச்சமயங்களுக்குப் பேராதரவும் வழங்கியுள்ளனர். களப்பிரர்கள் வைதீக சமயநெறிக்கு எதிரானவர்கள் என்ற கருத்து தமிழ் இலக்கிய, வரலாற்று ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுவது வழக்கம். இக்கருத்தானது தற்காலத்தில் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதாவது களப்பிரர் வைதீக சமயங்களுக்கு முற்றிலும் எதிரானவர்கள் அல்லர் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தைக் களப்பிரர் ஆட்சி புரிந்த காலப்பகுதியிலே திருக்குறள் தோற்றம் பெற்றது. திருக்குறள் அறத்துப்பால் பொருட்பால், இன்பத்துப்பால் என மூன்று உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. முப்பத்து மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ள அதே நேரம் ஒவ்வொரு அதிகாரமும் பப்பத்துக் குறளைக் கொண்டுள்ளன. சொல்ல விளைந்த பொருண்மையை இரு வரிகளால் விபரித்து நிறைவான கருத்தைத் தருவது என்ற காரணத்தினால் 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என வருணிக்கும் வழக்கம் உண்டு.

தமிழகத்தைத் தமிழ் மன்னர்களான சோழப் பெருவேந்தர்கள் கி.பி. 900 - கி.பி. 1200 வரையான காலப்பகுதியிலே ஆட்சி புரிந்துள்ளனர். இதனாற்றான் இக்காலத்தினை சோழப்பெருவேந்தர் காலம் எனவும் சைவ சித்தாந்தம் முதலான தத்துவ சிந்தனை மரபுகள் தோற்றம் பெற்ற காரணத்தினால் தத்துவ நெறிக்காலம் எனவும் அழைப்பர். இக்காலத்திலே சைவ சமயமும் ஏனைய வைதீக நெறிகளும் அரசர் மத்தியிலே பெரும் ஆதரவைப் பெற்று வளர்ச்சியடைந்தன. அக்காலத்தைய சைவ சமய வளர்ச்சியின் அடையாளமாக் கொள்ளத்தக்க விடயங்களிலே சைவ சித்தாந்த தத்துவம் முதன்மையானது. சைவ சித்தாந்த தத்துவத்தை வியாக்கியானம் செய்ய பதினான்கு சைவ சித்தாந்த சாத்திரங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அவற்றிலே உமாபதி சிவாச்சாரியாரால் பாடப்பெற்ற சித்தாந்த அட்டகத்துள் ஒன்றான திருவருட்பயன் சிறப்பு மிகுந்த நூலாகும். இந்நூல் பதிமுது நிலை துவக்கம் அணைந்தோர் தன்மை ஈறாக பத்து அதிகாரங்களைக் கொண்டுள்ளது. பதி, பசு, பாசம் முதலான முப்பொருள்களின் இயல்புகளை இருவரிகளால் வியாக்கியானம் செய்வதனால் அமைப்பியல் ரீதியாகத் திருக்குறள் பெறும் இடத்தினையே திருவருட்பயனும் பெறுகின்றமை கருத்திற்கொள்ளத்தக்கது.

## மெய்யுணர்வும் மெய்ப்பொருளும்

மெய்யுணர்வு என்பது பிறப்பு முதல் வீடுபேறு வரையான அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களானன்றி உண்மையான் உணர்தல் ஆகும். இதனை தத்துவ ஞானம் என்பர். ஆன்மாவின் அறிவை மறைப்பவை மலங்கள் மலப்பீடிப்பினால் ஆன்மாக்கள் அறிவு மயக்கம் காரணமாக மூல மெய்பொருளாகிய பதியினை அணுகவியலாது பிறவித்துன்பத்தினை அனுபவிக்கின்றன. ஆன்மாக்களின் அஞ்ஞான இருளை அகற்றி மெய்ஞானத்தினைப் பெறும் நிலையினால் உணரப்பெறும் பொருளே மெய்ப்பொருள் ஆகும். மெய்ப்பொருள் இங்கு கடவுள் என்னும் சொற்பதத்தினால் கையாளப்படுகின்றது.

## கடவுள் இருப்பை அறிதல்

உயிர்களின் அறிவினை மறைத்து அவற்றின் வீடு பேற்றுக்கு தடையாக உள்ளவை மலங்கள் என்பது சைவ சித்தாந்த உண்மை ஆகும். மலங்களை அறுத்து பதியாகிய இறைவனை உணரும் நிலையினை திருக்குறளிலே,

"கற்றீண்டு மெய்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி" (parimelazhagar, 1999)

பொதுவாக வீடுபேற்றுக்கு நிமித்த காரணமாகிய முதற்பொருளை உணர்வதற்குரிய உபாயங்கள் மூன்று ஆகும். அதாவது பிரதியட்சம் (காட்சி) அனுமானம் (கருதல்) ஆப்த வாக்கியம் (உரை) ஆகிய பிரமாணங்களால் கடவுளின் இருப்பை உணரலாம் (Vajravel, 2002). இவ்வளவைப் பிரமாணங்களிலே மெய்ப்பொருளை உணர்வதற்கு ஆப்த வாக்கியப் பிரமாணம் இங்கு கூறப்படுகின்றமை குறிப்பிடற்குரியதாகும். இதனை திருவருட்பயன்,

"கண்டபடியே கண்டு காணமை காணாமல்
கொண்டபடியே கொண்டிரு"

என்னும் வரிகளால் விளக்குகின்றன (Sivagnana Swamigal & Subramania Desigar, 1994). அதாவது கேவல சகலத்தை நீக்கி உன்னைக்காட்டின திருவருளையே கண்டு காணாமையாகிய தேகாதிப் பிரபஞ்சத்தைக் காணாமல் நீங்கி திருவருள் உன்னை எந்தப்படிக் கொண்டிருந்ததோ அந்தப்படி இரு எனக் கூறுகின்றது.

## கடவுளது சர்வ வியாபகத் தன்மை

தமிழக சமய மரபுகளின் தத்துவ விளக்கங்களிலே மூலப்பொருளான கடவுள் பற்றிய சிந்தனை காலந்தோறும் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. பழந்தமிழ் இலக்கியங்கள் முதல் சைவ சித்தாந்த சாத்திரங்கள் ஈறான சைவ - தமிழ் இலக்கியங்களிலே இவற்றினைக் கண்டு கொள்ளமுடியும். சைவ சித்தாந்த மரபிலே இறைவனுக்கு இரு இயல்புகள் உள்ளன அவை பொது இயல்பு சிறப்பியல்பு எனும்

இரண்டுமாம். இறைவனின் சிறப்பியல்பான எங்கும் வியாபித்து நீக்கமற நிறைந்திருக்கும் இயல்பினை, திருக்குறளின் கடவுள் வாழ்த்துப்பாடலில்,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு"

என்னும் வரிகளில் மெய்ப்பொருள் தத்துவம் விளக்கம் பெறும் விதம் கவனத்திற் கொள்ளத்தக்கது (parimelazhagar, 1999). அதாவது எழுத்துக்கள் எல்லாவற்றிலும் அகரம் என்னும் ஒலி எழுத்தை முதலாகக் கொண்டுள்ளன. அதுபோல் உலகத்திலுள்ள உயிர்கள் எல்லாம் ஆதியாகிய கடவுளை முதன்மையானதாகக் கொண்டுள்ளன. இதே பொருளைத்தரும் வகையிலான திருவருட்பயன் பாடல்வரி,

"அகர உயிர்போல் அறிவாகி எங்கும்

நிகரில்இறை நிற்கும் நிறைந்து"

என அமைந்துள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது (Sivagnana Swamigal & Subramania Desigar, 1994). அதாவது இறைவன் சர்வான்மாக்களுக்கும் அறிவுக்கறிவாகி சடசித்துக்களெல்லாம் இடைவிடாமல் ஒப்பில்லா மாமணியாகிய இறைவன் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்திருப்பான்.

## மெய்ப்பொருளை அறியும் அறிவு

சைவசித்தாந்தம் கூறும் உண்மைப் பொருட்களில் மேலான அறிவுடைய பொருள் பதி. ஆன்மாக்கள் இப்பதியினை அணுகவியலாது பந்திப்பது மலங்கள். பாசத்தால் கட்டுண்ட ஆன்மாக்களை தளை அறுத்து பிறவிக்குக் காரணமாகியது அறியாமை ஆகும். அறியாமை நீங்கும் பொருட்டு வீடுபேற்றுக்குக் காரணமாகிய மெய்ப்பொருளைக் காண்பதே மெய்யான அறிவு ஆகும். இதனைத் திருக்குறள்,

"பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னுஞ்

செம்பொருள் காண்பது அறிவு"

எனவும்,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு"

எனவும் கூறுகின்றன (parimelazhagar, 1999). இதனைத் திருவருட்பயன்,

"எல்லாம் அறியும் அறிவுறினும் ஈங்கிவர்ஒன்

றல்லா தறியார் அற"

என விபரிக்கின்றமை கவனத்திற் கொள்ளத்தக்கது (parimelazhagar, 1999).

## மெய்ப்பொருளை அடைதல்

ஆன்மாக்களின் இறுதி இலட்சியம் முத்தியின்பம் ஆகும். அதாவது பிறப்பென்னும் பிறவித்துன்பத்தால் சதாகாலமும் துன்பம் அனுபவித்த ஆன்மாக்கள் பற்றறுத்து (இருவினையொப்பு) தளைகளில் இருந்து நீங்கி (மலபரிபாகம்) இறையருளாகிய முத்தியின்பம் (சத்திநிபாதம்) அடைவதற்குப் பல்வேறு சாதனைகளைப் புரிய வேண்டும்.

"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி

மாசறு காட்சி யவர்க்கு"

எனத் திருக்குறள் கூறுகின்றது (parimelazhagar, 1999). அதாவது, அவித்தையின் நீங்கி மெய்யுணர்வு கைவரப்பெற்றவர்களுக்கு அம்மெய்யுணர்வு பிறப்பினை நீக்கி வீட்டினைக் கொடுக்கும். இதனைத் திருவருட்பயன்,

"இருள் இன்றேல் துன்பென் உயிரியல்பேல் போக்கும்

பொருள்உண்டேல் ஒன்றாகப் போம்"

அதாவது ஆணவ மலமானது இல்லையென்று சொல்வாயானால் பிறப்பு இறப்புத் துன்பம் வருவானேன் ஆன்மாவுக்குச் சுபாவம் என்று சொல்வாயானால் ஆணவத்தைப் போக்கத் தக்கதாக திருவருள் உண்டான காலத்தில் அப்போது ஆன்மாவும் அதனுடன் சேரும் (Sivagnana Swamigal & Subramania Desigar, 1994).

## முடிவுரை

தமிழரின் மெய்யியல் சிந்தனை மரபின் முகிழ்ப்பாகக் கொள்ளத்தக்க இலக்கியங்களிலே திருக்குறள் பெறும் முக்கியத்துவம் கவனத்திற்குரியது. திருக்குறளிலே அவைதீக சமயக்கருத்துக்கள் விரவிக் காணப்படுகின்றன என்னும் கருத்து மீள்பார்வை செய்யப்பட வேண்டியதாகும். மெய்ப்பொருள் பற்றிய நோக்கில் திருக்குறளை அவதானிக்கின்ற போது சைவ சித்தாந்த சிந்தனை மரபின் அக்கால வளர்ச்சி நிலையினைக் காட்டுவதாக அமைகின்றது. சைவ சித்தாந்த சிந்தனையின் தொடர்ச்சியினையும் வளர்ச்சியினையும் முதிர்ச்சியினையும் சோழப்பெருவேந்தர் காலத்தில் அவதானிக்க முடிகின்றன. சுருக்கமான வரிகளால் மெய்பொருள் பற்றிய தெளிவை விளக்கமாக வியாக்கியானம் செய்யும் நூல் என்ற வகையில் இரு நூல்களும் சிறப்பிடம் பெறுகின்றன. முப்பொருள்களான பதி, பசு, பாசம் ஆகியவற்றினையும், ஆணவம், கன்மம். மாயை ஆகிய மும்மலங்களையும் இரு நூல்களும் விபரிக்கும் பாங்கு குறிப்பிடத்தக்கது. பாசத்தளையினால் ஆன்மாக்களின் அறிவு மறைக்கப்படுவதனையும், மலபந்தங்களில் இருந்து நீங்கி மெய்யுணர்வு கைவரப்பெற்ற நிலையினையும், ஆன்மாக்கள் பிறவித்துன்பத்தில் இருந்து விலகி மெய்பொருளை நாடி நிற்கும் வீடுபேற்றினையும் இவ்விரு நூல்களும் அழகாகவும் ஆழமாகவும் எடுத்தியம்புகின்றன.

## References

Parimelazhagar, (1999) Thirukural, Pazhaniyappaa biradhars, Konaarmaaligai, Chennai. India.

Sivagnana Swamigal & Subramania Desigar, (1994) Sidhdhaantham pathinaangu Moolamum Uraivum, Saivasidhantha Perumanram, Chennai, India.

Vajravel, S., (2002) ThirukuralinUtkidai Saivasidhdhanthamey, Thenral Nilaiyam, Chennai, India.

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

V. Gunapalasingam, M.S.J. Mumthaj Sameem, R. Suresh, A comparative perspective of fact in Thirukkural and Thiruvarutpayan, Indian Journal of Tamil, 3(3) (2022) 1-4. https://doi.org/10.54392/ijot2231